கவிதை எழுதுதல்
தமிழ் பிரிவு : H.S

369

## இருளும் ஒளியும் :-

இயற்கையின் சூத்த,
இரு முரண் தொடைப் பூக்கள் நீங்கள்...!

இருளே...!
நீ சந்திர மன்னவனின் சாராம்சம் !

நீ,
இருண்மைத்தாயின்
கருப்பையில் கருத்தரித்ததனால் தானோ...,
என்றும்,
கருப்பு உடையை கைக்குழந்தையைப்போல்
கையில் ஏந்தியிருக்கிறாய்...!

இருட்டிலே பிறக்கிறாய்...!
இருட்டிலே இறக்கிறாய்...!

நீ, ஒரு வினோதமான பிறவி...!

ஆனால்,
ஆணவத்தில் ஆனந்தக்குளியல் போடாதே..!
ஒளி என்னும் ஒற்றன், உனை
வேவுபார்க்கிறான் வேரோடு அழிக்க...!

இருளே...!
நீ குடியிருக்கும் வானம் குடிசையில்
நட்சத்திர ஒளிகள் நடை பயிலுகிறதே...!

நீங்கள் இருவருமே,
இவ்வுலகை ஆளவந்த,
மாற்றான் பிள்ளைகள்...!

ஒளியே...!
உன் ஒற்றைக்கரங்களால், இந்த உலகத்தையே
ஒருக்கி விடுகிறாயே...!

மாண்டுப்பிறக்கும் வித்தையை
மானிடர்கள் கற்க வேண்டும் உன்னிடமிருந்து..!

மின்மினிகளின்,
மின்னி தகதகக்கும் மேனியுடுக்காய் நீ..!
மின்னல் ஒளியினால், கண்ணைப்பறிக்கும்,
மின்சார வேலி நீ..!

மின்னல்களோடு உறவு நடத்தும் கணவனே..!
அந்த ரௌத்திரம் உனக்கு மட்டும் தான்...!

இருளே..! ஒளியே...!
நீங்கள் இருவருமே,
பூமித்தாயின் மார்புப்பாலை ~~க்~~குடித்து வளர்ந்த,
இரட்டைப்பிள்ளைகள்...!

நீங்கள் இருவருமே,
ஒரு பூச்செடியில் இருந்து வந்த,
இரு முல்லைகள்..!

இருளே...!
நீ இருண்டவர்களின் தேசத்தில், சூரியனாய் உதிக்கும்
இனிய நண்பன்...!

இருளே..!
உன்னை பாராமல்,
மனிதர்கள் தூயில்வதுண்டோ..!
இருளே...!
வெண்ணிலவின் காதலன் நீ..! என்றும்,
வெண்கொற்றக்குடையை விரித்து,
வானத்தில் உலாவரும், இந்த வெண்சாமரத்தை
சொந்தமாக்கியவனே...!

கருமையே..!
உடையாக அணிந்த, உன்னதனே..!
காக்கையும், கார்முகிலும், நீயும்
ஒன்றுதான்...!

வைகறைப்பொழுதில், வையக மேனியை வருடி
பிறப்பெடுக்கும் சூரியனே...!
நீ ஒளி எனும் ஒருவனை உடையாக
அணிந்திருக்கிறாயா...?

இருண்ட விழிகளின், நீ
பூவிப்பூட்டைத்திறப்பவன் தான்..!
இருள் எனும் இருட்டை,
வாசித்து வருடும் வாலிபன் நீ தான்..!

பூக்கள் எனும் புன்னகைப்பெண்கள்
உனைக்கண்ட பிறகு பூக்கிறதாம்...!

சொல்லவில்லை நீ...!
பூக்களை திருமணம் செய்து,
அவள் நெற்றியில் திலகமிருவதை...!

ஒளியே...!

கூறும்,
உன் வைகறைப்பொழுது, இன்னும் எத்தனை
நெஞ்சங்களை நெய்யும்....!

கூறும்,
இன்னும், எத்தனை முறைதான்..,
இயற்கை எனும் ~~[illegible]~~ இனியவளின்
கருவறையில் பிறப்பாய்...!

கூறும்,
இன்னும், "பிறப்பு, இறப்பு" எனும்
பிச்சைப்பாத்திரத்தில் நிரம்பி வழிவாய்...!

இயற்கை அன்னையே...!
இவ்விருவர்களையும் ஈன்றெடுக்க நீ தவித்த,
பிரசவ அலறல், இன்னும் என் காதில் ஒலிக்கிறது!
கருவறையில் நீங்கள் இருவரும் இட்ட சண்டை,
கடைசியாக இந்த மண்ணில் வரும் போது,
கரைசேருகிறது...!

உங்களைக்கண்டால்...!
கவிஞர்களின் உள்ளம் கொஞ்சும்,
கன்னிமலர்களின் ~~[illegible]~~ வெள்ளம் மிஞ்சும்,
கவிமழலைகளின் கண்ணீர் கெஞ்சும்..!

இருளே...! ஒளியே...!
நீ இட்ட சண்டை தீரட்டும்,
நட்பு பெருக்கெடுத்து உங்கள் உடலில் சேரட்டும்!
இனிவரும் சந்ததிகள் இதை மீட்டும்...!

இருளே..!

மவளமல்லிப்போல் மௌனப்படுக்கையில்
துயிலுறங்குகிறாய் நீ...!
பகல் பிறந்தவுடன் ஒளி வந்து உன்னை,
விரட்டுகிறதே ...!
விரக்தி அடைந்த நீ..., மீண்டும் புகுந்துவிடு(கிறாய்),
தாய் கருவறையில், மீண்டும் பிறப்பெடுக்க..!

இந்த அந்திவானத்தில் சிதறுவது,
கருப்பு முத்துக்களல்ல...!
இயற்கை அன்னையின் மார்பில்
சிந்தும் சிவப்பு இரத்தங்கள்...!
இது பாலாக உருவெடுத்து,
இந்தப்பாலை குடிக்க துடித்து, வானத்தில்
தவழும் சிறு மழலை தானோ இருளே நீ...!

தித்திப்பு வழியும் மார்பின் பாலைக்குடிக்க,
தவழ்ந்து வரும் தம்பி பிள்ளைதானோ ஒளி..!

இருளே...!
நீ மெழுகுவர்த்தியை அணைத்தாலும் கிடைக்கும்,
இருண்மை தீபம்...!

இருளே...!
நீ இருண்ட வாழ்விற்கே பூசிய புண்ணிய
சாயம்...!

இருளே...!
நீ கருமையானவன் தான்...,
கருப்பலகையால் செய்தவன் தான்..,
கருவறை என்னும் கருப்பு அறைக்குள்,
சூழ்ந்தவன் தான்...,

பால்நிலாவின்,
பால்நிலாக்கிண்ணத்தின் நிரம்பி வழியும்
பாலைக்குடித்த , பாக்கியமுடையவன்
அல்லவா நீ...!

இருளே...!
நீ மாமரன்தான்...!
மாயம் இருட்டில் வாழும்,
மனிதர்களின் மகுடம் நீ...!

இருளே...!
நீ மரிப்பவன் தான்...,
மரித்தால் என்ன...? மீண்டும்,
பிறப்பவன் தான்...!

ஒளியே...!
ஓசைகளின் பிறப்பே
ஒளிக்கதிர்களின் பாதமே...!

கடைசிக்காலம் வரை
கடந்து நிற்கும் உன் மூச்சு...,
படர்ந்து நிற்கும் உன் பேச்சு...,
இதுவே "ஒளி" ஆச்சு...!

மரிக்கமரிக்க பிறப்பவன் நீ...,
பிறக்க பிறக்க மரிப்பவன் நீ..!
பிறப்பில் உருவெடுத்தும்,
இறப்பில் சிதைந்து எரியும்,
தீப்பிணமே...!
உன் ஆயுள் எல்லாம் அக்னிக்குழம்புகள்
தான் எத்தனை...!

மலர்களின் மணவாளனே...,
தென்றல் வந்து வருடும் வயோதிகனே..!
உன்,

வயது வரம்பு தான் எத்தனை...!
முகில் வந்து முற்றுகையிடும்
முன் கோபமே...!

உன் வைகறைப் பொழுது பிறப்பிடம்...,
உன் மாலைப் பொழுது இறப்பிடம்!

பால்நிலாத் தோகையை, வீசி,
பால்நிற சலங்கைகளை ஒலித்து, பாவனை செய்து,
நடனமாடும்,
பால்நிலாவின் பால்வீதியில் நீ நடைபயிலவில்லை,
என்று உனது கதறல், கல்லறை வரைக்கும்,
ஒலிக்குமாம் கள்ளனே...!

இருப்பினும் என்ன...?
இருள் சூழ்ந்த நெஞ்சங்களின்
இதயத்தை வெளுக்கும் சலவையல்லவா நீ...!

கல்லறைகளின் கண்ணீரைத்துடைக்கும்,
கைக்குட்டையல்லவா நீ...!

சுந்திரப்புன்னகைச்செய்யும்,
மந்திரப்பூக்களின் மணத்தை கவர்ந்த,
மணவாளன் அல்லவா நீ...!

தேவதைகள் ஓட்டிச்செல்லும்
ஊர்தி நீ...!
இறைவன் தங்கும்,
இல்லறம் நீ...!
இருளை விலக்கும்,
தீபந்தம் நீ...!

Office of the Deputy Director of Education, Palakkad
Date:

இயற்கைதாயின், கருவறையிலிருந்து,
பூத்து வெளிவரும், புண்ணியப்புதல்வனே...!
புனிதத்தாயின் மார்புப்பாலைப்
புசித்தவனே...!
புண்ணிய நதியைத்தழுவி வந்த,
புனித நீரோடையே...!
பூவிழி வாசலின் பூட்டைத்திறக்கும்
புதுச்சாவியே...!
பெருமை என்றும் மென்னகைப்பூண்டு,
புன்னகையாக்குகிறேன் உனை நான்...!

இருளே...!
இருண்ட மௌனத்தில்,
இரவு தேவதையின், புன்னகையைப்பார்த்து
இரசிக்கும் இனியவனே...!
இருண்மை பள்ளக்கில் தாக்கும் உனை..!

இருளே..! ஒளியே...!
நீங்கள்
இருவரும் இரட்டைசகோதரர்கள்...!
இணைபிரியாமல் இருங்கள்..!
இனிக்கட்டும் உங்கள் நட்பு...!
நட்புப்பெருக்கெடுத்து உங்கள் உடலில்
சீறட்டும்...!
இனிவரும் நண்பர்கள் இதை
ரேட்டும்...!
உங்களில்
உறவுப்பாலம் நீளட்டும்!